# மாநிலங்களின் கல்வி உரிமையை அபகரித்து

# கல்வியைக் காவிமயமாக்கத் துடிக்கும் பாசிஸ்ட்டுகளின் முயற்சிகளை முறியடியுங்கள்!

## ‘திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கத்தின்’ தொடக்க விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, அக். 30 -**

**சென்னையில் திராவிட இயக்கச் சிந்தனையுடைய பேராசிரியர்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வரும் விதமாக, ‘திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கத்தின்’ தொடக்க விழா நடைபெற்றது. இதில் துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்க லோகோவை வெளியிட்டு சிறப்புரை ஆற்றினார்.**

**அப்போது, `மாநிலங்களின் கல்வி உரிமையை அபகரித்து, நாடெங்கும் கல்வியை காவிமயமாக்கத் துடிக்கும் பாசிஸ்ட்டுகளின் முயற்சிகளை முறியடிக்கும் வகையில், திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கத்தின் பணிகள் அமையட்டும்’ என்று வாழ்த்திப் பேசினார்.**




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 26.10.2024 அன்று கலைவாணர் அரங்கில் திராவிட கருத்தியல் ஆசிரியர் சங்கத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் நா.எழிலன், சி.வி.எம்.பி. எழிலரசன், தமிழ்நாடு சமூக நீதி கண்காணிப்புக் குழுவின் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், வழக்கறிஞர் அ.அருள்மொழி மற்றும் ஆசிரியர் சங்கம் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

விழாவில் துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு: -

திராவிட இயக்க வரலாற்றின் மிக முக்கிய நிகழ்வாக, இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற `திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கத்தின் தொடக்க விழா’வில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன். இங்கு மேடையில் அமர்ந்திருக்கின்ற சிறப்புரையாளர்கள் அனைவரும் காலத்தின் அருமை கருதி, மிகச் சுருக்கமாகப் பேசி, பல நல்ல கருத்துகளை எடுத்துரைத்து, எனக்கு வழி விட்டு இருக்கிறார்கள்.

### திறமை வாய்ந்தவர்கள்!

காலை 10 மணி அளவில் தொடங்கிய நிகழ்ச்சிகள், தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இன்றைக்கு இந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ள வந்திருக்கிறேன். இதற்கு பின்பும் ஒரு நிகழ்ச்சி இருக்கிறது. இங்கு பேசிய சிறப்புரையாளர்கள் எல்லாம், இன்னும் பேசவிட்டிருந்தால், ஒவ்வொருவரும் குறைந்தது ஒரு மணி நேரம் சிறந்த கருத்துக்களைப் பேசக்கூடிய திறமை வாய்ந்தவர்கள். இருந்தாலும், எனக்கு வழிவிட்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு, என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நான் ஒரு மாணவன்!

இன்னும் சொல்லப்போனால், இந்த மேடையைப் பார்க்கும்போது, உங்களை எல்லாம் பார்க்கும்போது பதற்றமாக இருக்கிறது. ஏனென்றால், பள்ளிக்கூடத்தில் படிக்கும்பொழுதும் சரி, கல்லூரியில் படிக்கும்பொழுதும் சரி, நான் ஒரு அவுட் ஸ்டாண்டிங் ஸ்டூடென்ட்தான். அவுட் ஸ்டேண்டிங் ஸ்டூடென்ட் என்றால் உங்களுக்கு என்னவென்று தெரியும். ஒரு ஆசிரியர் முன்பு நின்று பேசுவதில், எனக்குக் கொஞ்சம் பயம்தான். ஆனால், இங்கு ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் வந்து இருக்கிறீர்கள். அதனால், இங்கு நான் ஒரு மாணவனாகத்தான் வந்து இருக்கிறேன். அதுவும் நீங்கள் எல்லாம் சாதாரண ஆசிரியர்கள் எல்லாம் கிடையாது, திராவிட இயக்கத்தின் ஆசிரியர்கள். அதனால், மிகவும் சரியாக, நிதானமாகப் பேச வேண்டும். இல்லையென்றால், மதிப்பெண் எனக்குக் குறைத்துப் போட்டு விடுவீர்கள்.

இன்னொரு பெருமை, இன்னொரு மகிழ்ச்சி என்னவென்றால், இங்கு நிறைய பேர் கருப்புச் சட்டை போட்டு இருக்கிறீர்கள். எனக்குப் பிடித்த நிறம் கருப்பு. சங்கிகள் இன்றைக்கு நாடு முழுக்க கல்வித் துறையைக் காவிமயமாக்க நினைக்கின்ற இந்த நேரத்தில் இந்த சங்கம் இங்கு தொடங்கப்பட்டு இருக்கிறது. மிக மிக அவசியமான ஒரு செயல்.

### காலத்தின் கட்டாயம்!

இன்னும் சொல்லப்போனால், காலத்தின் கட்டாயம் என்று கண்டிப்பாகச் சொல்வேன். 1912- ஆம் ஆண்டில் டாக்டர் நடேசன் அவர்களால் தொடங்கப்பட்ட முதல் திராவிடச் சங்கத்தின் முதல் பணியே, பார்ப்பனர் அல்லாத மாணவர்கள் அனைவரும் கல்வி பெற உதவுவதாகத்தான் இருந்தது. இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், பட்டம்பெற்ற பார்ப்பனர்கள் அல்லாத மாணவர்களுக்குப் பாராட்டு விழா எல்லாம் நடத்தினார்கள். அதுமட்டுமல்ல, `திராவிடர் விடுதி’யை ஆரம்பித்து, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மாணவர்கள் தங்கி படிக்க, அந்த விடுதி அவர்களுக்குத் துணையாக நின்றது.

மாணவர்களின் முன்னேற்றத்திற்காக நடேசனார் பின்பு, அன்றைக்கு ஏராளமான நம் ஆசிரியர்கள் பின்னாடி நின்றுகொண்டு இருந்தார்கள். அன்று, திராவிட இயக்க ஆசிரியர்களுக்குத் தனியாக சங்கம் என்று எதுவும் இல்லை. இத்தனை வருடங்கள் கழித்து, அதுவும் சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்த சங்கம் இங்கே துவங்கப்பட்டு இருக்கிறது.

### மாலை நேர கல்லூரிகள்!

ஒரு சங்கத்தைத் துவங்குவது, அவ்வளவு சுலபம் இல்லை. அதை வெற்றிகரமாக நடத்துவது, அதைவிட மிகச்சிரமம். அதை மனதில் வைத்துக்கொண்டு உங்களின் பணிகளை, இன்னும் சிறப்பாக அமைத்துக் கொள்ளவேண்டும் என்பது என் வேண்டுகோள். எல்லோரும் படிக்க வேண்டும் என்று தோன்றியதுதான், திராவிட இயக்கம். இதற்காகத்தான் தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தங்கள் வாழ்க்கை முழுவதும் போராடினார்கள். பணிகளைச் செய்தார்கள்.

அதனால்தான், நீங்கள் எல்லோரும் படித்ததோடு மட்டுமல்லாமல், அடுத்த தலைமுறை மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கின்ற நிலைமைக்கு, அனைவரும் வந்து இருக்கிறீர்கள். தமிழ்நாட்டின் முதல் பேராசிரியர் யார் என்றால், தந்தை பெரியார்தான் என்று, நம் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். ஏனென்றால், பெரியாரின் பொதுக் கூட்டங்கள் தான் அன்றைக்கு மாலை நேர கல்லூரிகளாக இருந்தன.

பேரறிஞர் அண்ணா அவர்களும் சிறிது காலம் பேராசிரியராகப் பணியாற்றினார். நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பள்ளி, கல்லூரிகளில் ஆசிரியராகப் பணியாற்றவில்லை. ஆனால், முரசொலியைத் தொடங்கி, அதன் ஆசிரியராக தமிழ் மக்களுக்கு அறிவுப்பூர்வமான சிந்தனைகளை ஊட்டி வளர்த்தவர்தான், முத்தமிழ றிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

### இளைஞர்களுக்குக் கொள்கை உணர்வு!

தமிழ்நாட்டு இளைஞர்களுக்குக் கொள்கை உணர்வு ஊட்டியவர் யார் என்று பார்த்தீர்கள் என்றால், நம் இனமானப் பேராசிரியர் அவர்கள். நம் தலைவர்கள் ஊட்டிய அந்தக் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு இத்தனை ஆயிரம் பேராசிரியர்கள் உருவாகி இருக்கிறீர்கள் என்றால், அதுதான் நம் திராவிட இயக்கத்தின் வெற்றி என்று சொல்லலாம்.

படிக்காதவர்களைவிட, படித்தவர்களை ஒரு விஷயத்தை, குறிப்பாக கொள்கைகளை ஏற்றுக்கொள்ள வைப்பது, நம்ப வைப்பது அதுதான் இருப்பதிலேயே மிகுந்த சவாலான ஒரு விஷயம். அப்படிப் பார்த்தால் எம்.ஃபில்., பி.ஹெச்.டி என்று படித்திருக்கின்ற நீங்கள், திராவிட இயக்க கருத்துக்களை ஏற்றுக்கொண்டு இருக்கிறீர்கள் என்றால், அந்தக் கருத்து எவ்வளவு வலிமையானதாக, எவ்வளவு உண்மையானதாக இருக்கும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதனால்தான் இன்றைக்குக்கூட திராவிடம் என்ற அந்த வார்த்தையைப் பார்த்தால், கேட்டால்கூட சில சங்கிகளுக்கு அலர்ஜி. கதறிக் கொண்டு வருகிறார்கள். நிறைய பேராசிரியர்கள் நிறைய துணை வேந்தர்களை நம் திராவிட இயக்கம் உருவாக்கியது. அவர்கள் திராவிட இயக்கம் பற்றி நூல்களில் எழுதி இருக்கிறார்கள். நிறைய மாணவர்களை நம்பக்கம் கொண்டு வந்து சேர்த்தார்கள். ஆனால், இன்றைக்கு உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், கல்லூரிகள், பல்கலைக்கழக வளாகங்களில் எல்லாம் சங்கிகளின் நடமாட்டம் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும்

### ஆளுநருக்கு பதிலாக ஆரியனர்!

மாநிலங்களுக்கு ஆளுநர்கள் வருவார்கள் என்று பார்த்தோம். ஆனால், ஆளுநருக்கு பதிலாக ஆரியனர்கள்தான் வந்து கொண்டு இருக்கிறார்கள். ஆளுநர் வேலையைப் பார்ப்பதற்குப் பதிலாக, கல்வி வளாகங்களில் சங்கிகளை உருவாக்குகின்ற வேலையைத்தான் செய்து கொண்டு இருக்கிறார்கள். இங்கு ஒரு ஆரியனர் இருக்கிறார். நான் யாரைச் சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும். உயர்கல்வித் துறை அமைச்சருக்கு நன்றாகவே தெரியும்.

திராவிட இயக்கம், பல ஆண்டுகள் பாடுபட்டு, தமிழ்நாட்டில் நிறைய பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளைக் கட்டி வைத்தால், அங்கு எல்லாம் சென்று விழா என்கிற பெயரில் சங்கிக் கருத்துகளைத் தொடர்ந்து பரப்பி கொண்டு வருகிறார். அவருக்கு தமிழ்நாடு என்ற வார்த்தை பிடிக்காது. அவருக்கு தமிழ்த்தாய் வாழ்த்தும் பிடிக்காது. திராவிடம் என்கிற வார்த்தையும் பிடிக்காது. அவருக்குப் பிடித்தது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். ஒரே யொரு வார்த்தைதான் அது என்ன வார்த்தை என்றால், மன்னித்துக் கொள்ளுங்கள்.

இவை எல்லாவற்றையும் அண்ணாவையும், திராவிடத்தையும் கட்சியின் பெயரில் வைத்திருக்கின்ற அடிமைகள் என்றைக்காவது கண்டித்து இருக்கிறார்களா? இல்லை, கண்டு கொள்கிறார்களா? கண்டு கொள்ள மாட்டார்கள். ஏனென்றால், அவர்களுக்கு எதுவுமே தெரியாது. திராவிடத்திற்கு அர்த்தமே என்ன என்று சொல்லத் தெரியாதவர்தான் அந்தக் கட்சியின் தலைவர். ஆனால், இவை எல்லாவற்றையும் நாம் கவனித்துக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டு மக்களும் தொடர்ந்து கவனித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

### சங்கத்தின் தேவை!

இந்த மாதிரியான நேரத்தில் இந்த சங்கத்தின் தேவை என்பது மிக மிக முக்கியமானது. எனவே இந்த பணியை முன்னெடுத்த பேராசிரியர் அண்ணன் சுப.வீ அவர்களுக்கும், அக்கா அருள்மொழி அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் சகோதரர் எழிலன் அவர்களுக்கும், இந்த சங்கத்தை ஒருங்கிணைத்த மாரப்பன் உள்ளிட்ட அனைவருக்கும் என் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக அண்ணன் சுப.வீ அவர்கள், அக்கா அருள்மொழி அவர்களெல்லாம் இன்றைக்கு திராவிட இயக்கத்தின் பேராசிரியர்களாக இருந்து, நம் திராவிட இயக்கக் கொள்கைகளைப் பட்டிதொட்டி எங்கும் கொண்டுபோய் சேர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். நம் கொள்கையை, வரலாற்றை எல்லோரிடமும் சேர்க்க வேண்டும் என்று தி.மு.க இளைஞர் அணியின் சார்பாக, கலைஞரின் மூத்தப்பிள்ளை என்று அவர் எப்போதும் செல்கின்ற `முரசொலி’யில் `பாசறைப் பக்கம்’ என்ற ஒரு பக்கத்தை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்தோம்.

அதில் அண்ணன் சுப.வீ அவர்கள் `எழுதி வளர்ந்த இயக்கம்’ என்ற ஒரு தொடரை தொடர்ந்து எழுதினார். அதேமாதிரி அக்கா அருள்மொழி அவர்கள் திராவிட இயக்க பெண் போராளிகளை பற்றி தொடர்ந்து எழுதினார்கள். நம் மருத்துவர் எழிலன் அவர்கள் `டாக்டர் கலைஞர்’ என்ற தலைப்பில், மருத்துவத் துறைக்கு நம் முத்தமிழறிஞர் கலைஞர் ஆற்றிய பணிகளைப் பற்றி ஒரு தொடராக எழுதியுள்ளார். அவர்களின் கொள்கைப் பணி போற்றுதலுக்கு உரியது. இதுவரைக்கும் இரண்டு வருடங்களில் அவர்களுக்கு நன்றி சொன்னதில்லை. அந்தப் பணிகளுக்காக இந்த மேடையை அவர்கள் மூன்று பேருக்கும் நன்றி சொல்வதற்காக பயன்படுத்திக் கொள்கிறேன்.

### திராவிட இயக்கம்!

1920-களில் தமிழ்நாட்டில் சமஸ்கிருதப் பேராசிரியர்களுக்கு அதிக சம்பளம் வழங்கப்பட்டது. எவ்வளவு தெரியுமா மாதம் 300 ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால், தமிழ்ப் பேராசிரியர்களுக்கு எவ்வளவு தெரியுமா சம்பளம். மாதம் வெறும் 75 ரூபாய் சம்பளமாக வழங்கப்பட்டது. அதை எதிர்த்துப் போராடி, தமிழ்ப் பேராசிரியர்களின் சம்பளத்தை உயர்த்திய இயக்கம்தான் திராவிட இயக்கம்.

அந்தக் காலத்தில் மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டும் என்றால் அந்த மாணவர்களுக்கு சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்பது ஒரு அடிப்படை தகுதி. அப்போதுதான் மருத்துவக் கல்லூரி விண்ணப்பங்களே கொடுக்கப்படும். அதை எதிர்த்து போராடி ஒழித்ததும் நம் திராவிட இயக்கம்தான். அதனால்தான் இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட, பட்டியல் இன மாணவர்கள் எல்லாம் மருத்துவருக்குப் படிக்கிறார்கள்.

ஆனால், இன்றைக்கு எத்தனை மருத்துவர்களுக்கு இந்த வரலாறு தெரியும். இந்த வரலாறு எல்லாம் பல மருத்துவர்களுக்கு தெரியவே தெரியாது. அந்தக் காலத்தில் இருந்த சங்கிகள் மட்டும், நம் கல்வி வளர்ச்சியைத் தடுக்கவில்லை. இப்போது இருக்கின்ற சங்கிகளும் அதே வேலையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீட் க்யூட் என்று பல பெயரில் நம் கல்வியைத் தடுக்கலாம் என்று பார்க்கிறார்கள்.

### குடும்பத் தொழில்!

நாம் கஷ்டப்பட்டு மாணவர்களை உயர் கல்விக்குக் கொண்டு வர முயற்சி செய்கிறோம். ஆனால், சங்கிகள் எப்படியாவது மாணவர்களை உயர்கல்வியிலிருந்து விரட்டி அடிக்க, பல திட்டங்களைக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுதுகூட ஒன்றிய அரசு `விஸ்வகர்மா திட்டம்’ என்று கொண்டு வந்து இருக்கிறார்கள். நம் மாணவர்களை அவர்களின் குடும்பத் தொழிலைச் செய்ய வைத்து, அவர்களின் படிப்பை கெடுக்கின்ற திட்டம்தானே அது.

திராவிடம் என்ன சொல்கிறது, வங்கிக் கடன் வாங்கியாவது உயர்கல்வி படி என்று சொல்வதுதான் திராவிடம். ஆனால் நீ குலத்தொழில் செய், நான் உனக்கு கடன் தருகிறேன் என்று சொல்வதுதான் ஆரியம். இந்த மாதிரி பிற்போக்குத்தனமான திட்டங்களைக் கொண்டு வந்து விட்டு அதையெல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லி, மாநில அரசுக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுத்துக் கொண்டு இருக்கிறது ஒன்றிய அரசு.

இதையெல்லாம் நடைமுறைப்படுத்தாத மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அதற்கான முறையான நிதியையும் ஒதுக்குவது இல்லை. இதற்கு மத்தியில்தான் நம் திராவிட மாடல் அரசு மாணவர்களுக்கு அடுக்கடுக்கான திட்டங்களைக் கொண்டு வந்து கொண்டிருக்கிறது. புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம், இல்லம் தேடி கல்வி திட்டம், கட்டணமில்லாம் பேருந்து வசதி திட்டம் மாணவர்களின் படிப்பை மட்டுமே நோக்கமாக வைத்து பல திட்டங்களை நம் திராவிட மாடல் முதலமைச்சர் தந்து கொண்டிருக்கிறார். எனவே திராவிட கருத்தியல் என்பது நமது உரிமைக்கான கருத்தியல்.

நம்மை உயர்த்துவதற்கான கருத்தியல். சங்கிகளின் கருத்தியல் என்பது நம்மை கல்வியின் பக்கம் போக விடாமல் செய்து, நம்மை தாழ்த்துவதற்கான கருத்தியல். எனவே, இங்கு வந்திருக்கின்ற பேராசிரியர்கள், ஆசிரியர்கள், தொடர்ந்து இணைந்து பயணம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### சிறப்பான தீர்மானங்கள்!

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காண விரும்பிய அறிவில் சிறந்த தமிழ்நாட்டை வளர்ச்சி அடைந்த தமிழ்நாட்டை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து பாடுபடுவோம். உழைப்பு என்று கூறிக்கொண்டு, இங்கு நிறைவேற்றப்பட்ட சிறப்பான தீர்மானங்களைப் பாராட்டுகிறேன். நமது அரசு அதை நிச்சயம் பரிசீலனை செய்யும் என்ற அந்த உறுதிமொழியும் அளிக்கிறேன்.

நம் திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட மாடல் அரசும் நம் முதலமைச்சர் அவர்களும் என்றைக்கும் உங்களுக்கு துணையாக நிற்பார்கள். நானும் என்றென்றும் உங்களோடு பயணிப்பேன். திராவிட கருத்தியல் ஆசிரியர்களின் சங்கம் வெல்லட்டும். இந்த சங்கத்தை உருவாக்குவதற்கான பணிகளை ஒருங்கிணைத்த அத்தனை திராவிட இயக்க உணர்வாளர்கள், செயல்பாட்டாளர்களுடன் எனது வாழ்த்துக்களை, பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்!

அமைச்சர்கள் சேகர்பாபு, கோவி.செழியன், திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், திட்டக்குழுத் துணைத் தலைவர் ஜெயரஞ்சன், பேராசிரியர் கருணானந்தம், திராவிடர் கழகப் பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன், மருத்துவர் டாக்டர்.எழிலன், பேராசிரியர்கள் முனைவர் மாரப்பன், முனைவர் பாலசுப்பிரமணியன், அன்பழகன், அயோத்தி, தனுஷ்தாஸ், முனைவர் இளம்பரிதி, கழக மாணவர் அணி தலைவர் ராஜீவ் காந்தி, கழக மாணவர் அணி இணைச் செயலாளர்கள் பூவை ஜெரால்டு, மோகன், திராவிட கருத்தியல் ஆசிரியர் பெருமக்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அறந்தாங்கியில் இருந்து புதுக்கோட்டை வழியாக திருச்சி வரை புதிய பேருந்து சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார். நிகழ்வில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் உதயம் சண்முகம், அறந்தாங்கி நகராட்சி தலைவர் இரா.ஆனந்த், அறந்தாங்கி ஒன்றியக் குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், சக்தி ராமசாமி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கும்பகோணத்தில் 20.01.2017–ல் ஜல்லிக்கட்டுக்கு எதிரான தடையை நீக்க வலியுறுத்தி இரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ., கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கில் கும்பகோணம் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் ஆஜராகி வெளிவந்தனர். உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மாவட்ட அவைத்தலைவர் க.நசீர் முகமது, முன்னாள் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பா.விஜயகுமார், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர் டி.ஆர்.அனந்தராமன், கே.கே.எஸ்.ராஜா ஆகியோர் உள்ளனர்.